**நாள்:** 13.10.2025

**O.S. No. 30/2022**

**பி.வா.சா.1**

**பெயர்: மீனா , க/பெ. தமிழ்மணி**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் புலஎண் 53/1A 2, விஸ்தீரணம் 9. 3/4 மா. தாவா சொத்தின் நான்கெல்லை என்னவென்றால் வடக்கில் பெரிய வாய்க்கால் மேற்கே கன்னி, கிழக்கில் ரோடு, தெற்கில் எங்களுடைய இடம் உள்ளது அதில் பிரதிவாதிகள் பிரச்சனை செய்கிறார்கள். நான் சொல்லியுள்ள சாட்சியத்திற்கும் வழக்குரை சொத்து விபர நான்கெல்லைக்கும் முரன்பாடு உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு மேற்கே கன்னி உள்ளதாக நான் சாட்சியம் அளித்துள்ளபோதும் வழக்குரை சொத்து விபரத்தில் அவ்வாறு இல்லை என்பதால் நான் வழக்குரையில் கூறியுள்ள சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல.

நான் தாவா சொத்தை எப்போது யாரிடமிருந்து கிரயம் பெற்றதாக சொல்கிறேன் என்றால் 2018 ல் கபிலன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். தாவா சொத்திற்கு மேற்கே பிரதிவாதி மற்றும் அவரது மகன் ஆகியோரது சொத்து உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி 1995 முதலே தாவா சொத்திற்கு மேற்கே உள்ள சொத்தை அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் எனக்கும் எல்லை பிரச்சனை என்று சொன்னால் சரிதான். 08.03.2022 அன்று பிரதிவாதி சர்வேயர் மூலம் அவர்குரிய சொத்தான புலஎண் 53/1A1 சொத்தினை அளவீடு செய்திருந்தார் என்றால் சரிதான். சர்வேயர் மூலம் அளந்து அளவீடுகல் நடப்பட்டிருந்ததை நான் பிடுங்கிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எங்கள் இடத்திற்குள் அவர்கள் இடம் இருப்பதாக சொல்லி கல் வைத்துவிட்டார்கள். பிரதிவாதி அவரது சொத்தின் எல்லையாக இருந்த வரப்பினையும் எல்லை கல்லையும் நான் ஆலவாய் கிராமம் கீழத்தெருவை சேர்ந்த நடேசன் மகன் சந்தானம் என்பவர் மூலம் அகற்றிவிட்டேன் என்றால் சரிதான். அதன் காரணமாக பிரதிவாதி ஏகாம்பரம் கொரடாச்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு தான்

இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி அவருக்குரிய சொத்தை உரிய முறையில் சர்வேயர் மூலம் அளவீடு செய்து எல்லை கல் வைத்திருந்ததை பிடுங்கிவிட்டு இந்த பிரதிவாதி காவல் நிலைய புகார் கொடுத்ததற்கு பின்னர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்தமான புலஎண் 53/1A1 ல் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். புலஎண் 53/1A2 தாவா சொத்தின் பெயரில் பிரதிவாதி எவ்வித ஆக்கிரமிப்பு முயற்சி செய்யவில்லை என்றாலும் புலஎண் 53/1A1 ல் மட்டுமே பிரதிவாதி அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல.

எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எல்லை பிரச்சனை இருந்த நிலையில் இந்நீதிமன்றம் மூலம் சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் நியமிக்க மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் கடந்த 23.05.2023 அன்று பிரதிவாதி ஐந்து நபர்களுடன் வந்து தாவா சொத்தை ஆக்கிமிக்க முயற்சிசெய்ததாக குறிப்பிட்டுருப்பது பெய்யானது என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் தற்போது விற்பனை செய்துவிட்டேன் என்றாலும் தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை நான் விற்பனை செய்துவிட்டதை உறுதிபடுத்த வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை தற்போது யார் சாகுபடி செய்துவருகிறார்கள் என்றால் தெரியவில்லை. தாவா சொத்தின் அனுபவம் என்னிடம் இல்லை என்ற காரணத்தால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.10.13 17:12:58 +0530